1991 சனவரி 21]

கீழே போய்விட்டது. ஆகவே அங்கே மத்தியிலே இருக்கக்கூடிய நீராழியைச் சுற்றி ஒரு 25 அடி அகலத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பி அந்த இடத்திற்குள்ளே கான்கிரீட் தளம் அமைத்து—ஏற்கெனவே திருவல்லிக்கேணியில் இருக்கக்கூடிய பார்த்தசாரதி கோயிலைச் சேர்ந்த குளத்திலே அப்படிப்பட்ட கான்கிரீட் தளம் முழுவதுமாக அமைக்கப்பட்டிருக்கிறது—அப்படியே இங்கே முழுவதுமாக அமைக்காமல் 25 அடி அகலத்திற்கு மட்டும் அமைத்து, 6 அடி ஆழம் தண்ணீர் நிற்கக்கூடிய அளவுக்கு அமைப்பதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்து வருகிறது.

நுகர்வோர் புகார்களை விசாரிக்க மாவட்ட அமைப்புகள்.

* 2458—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நுகர்வோர் புகார்களை விசாரிக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்பு (District Consumer Disputers Redressal Forum) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் நுகர்வோர்களது புகார்களை விசாரித்துக் கொண்டிருக்கின்றன.

9–45 மணி

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம், இதுவரையில் என்னென்ன புகார்களைப் பெற்றுள்ளது ? அவைகளில் முக்கிப்மானவைகள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் மாவட்டத்திலே உள்ள இந்தக் குழுக்கள், நுகர்வோர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகள் குறித்துத் தெரிவிக்கின்றபோது, அவைகளை விசாரித்து முடிவு சொல்லியிருக்கிறது. சென்னையிலே 90

புகார்கள் 30-12-1990 முடிய கிடைக்கப் பெற்றுள்ளன. 22க்கு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. 68 விசாரணையில் இருக்கின்றன. அதேபோன்று வடஆற்காடு அம்பேத்கார் 14 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 13 விசாரணையில் உள்ளன. தென் ஆற்காடு 4 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 3 விசாரணையில் உள்ளன. தஞ்சாவூரில் 6 பெறப்பட்டு, 3 முடிக்கப்பட்டு, 3 விசாரணையில் உள்ளன. புதுக்கோட்டை 8 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 7 விசாரணையில் உள்ளன. திருச்சியில் 6 பெறப்பட்டு, ஆறும் விசாரணையில் இருக்கின்றன. நீலகிரி 4 பெறப்பட்டு நான்கும் விசாரணையில் இருக்கின்றன. திண்டுக்கல் காயிதே மில்லத்தில் ஒன்று பெறப்பட்டு ஒன்றும் முடிக்கப்பட்டுள்ளது. பசும்பொன் தேவர் திருமகனில் 2 பெறப்பட்டு, இரண்டும் விசாரணையில் இருக்கின்றன. காமராஜர் மாவட்டத்தில் 20 பெறப்பட்டு, 4 முடிக்கப்பெற்று, 16 விசாரணையில் இருக்கின்றன. திருநெல்வேலி-கட்டபொம்மன் 3 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 2 விசாரணையில் இருக்கின்றன. அதுபோன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு பெறப்பட்டு இரண்டும் விசாரணையில் இருக்கின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார்கள் கொடுக்கப்பட்ட பிறகு, விசாரணைக்கு எடுத்து, முடிவு எடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்று பொதுமக்கள் மத்தியிலே ஒரு கருத்து இருக்கிறது. அதைப் போக்க விரைவான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான குற்றச்சாட்டு, அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி தனித்து ஏதாவது குற்றச்சாட்டு இருக்குமானால், உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

* 4402—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும் ?